NOVEMBER 2024

**70083/100L1A/100H1A**

---

Time : Three hours | Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்திற்கு 30 சொற்களில் விடையெழுதுக.

1. தொல்காப்பியம் எத்தனை அதிகாரம் மற்றும் இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?

2. 'ய்' என்னும் ஒற்றுடன் ஈரொற்று வருமிடங்களுக்குச் சான்று தருக.

3. ஐஞ்சிறுங்காப்பியங்கள் எவையெவை?

4. முல்லைப்பாட்டில் யானைப் பாகரது செயல் என்ன?

5. "நாடா கொன்றோ காடா கொன்றோ" — இவ்வரிகளை எழுதியது யார்? எந்த இலக்கியத்தில் இவ்வரி இடம்பெற்றுள்ளது?

6. பெயர்க்காரணம் தருக : நான்மணிக்கடிகை.

7. அறிவு, அனுபவம் மற்றும் நல்லொழுக்கத்தின் இனிமையாக இனியவை நாற்பது கூறுவது என்ன?

8. தீவதிலகை என்பவள் யார்?

9. பூசலார் இறைவனுக்கான கோவிலை எங்கு கட்டினார்? ஏன்?

10. நபிகள் நாயகம் வேடனுக்குக் கூறிய அறிவுரை என்ன?

11. திருநாவுக்கரசருக்கு வழங்கப்பெறும் வேறு பெயர்களை எழுதுக.

12. கடுவெளி என்பதன் பொருள் யாது?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்திற்கு முறையே 200 சொற்களில் விடையெழுதுக.

13. வல்லினம் மிகும் இடங்களைச் சான்றுகளுடன் எடுத்துரைக்க.

14. சித்தர் இலக்கியம் குறித்து எழுதுக.

15. "நின்ற சொல்லர் ...." எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலை எழுதி அதன் கருத்துக்களை விளக்குக.

16. கல்வியின் அழகு எது? நாலடியாரின் கருத்துக்களை விளக்குக.

17. இராமனைத் தன் இருப்பிடத்திற்குத் தங்க குகன் வேண்டிய விதத்தினை எழுதுக.

18. மார்கழித் திங்கள் எனத் தொடங்கும் ஆண்டாள் பாடலின் செய்திகளை விளக்கி எழுதுக.

19. தாய்மொழி குறித்துத் தாய்மொழிப் படலம் மொழிவனவற்றை விளக்குக.



பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்றிற்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. எட்டுத் தொகை நூல்களை அறிமுகம் செய்க.

21. பன்னிரு திருமுறைகள் குறித்துக் கட்டுரை வரைக.

22. முல்லைப்பாட்டில் தலைவியின் மனநிலை எத்தகையது? -விளக்குக.

23. அறன் வலியுறுத்தல் அதிகாரத்தின் வழி வள்ளுவர் மொழிவனவற்றை விவரி.

24. வழக்குரைக் காதையின் செய்திகளைச் சுருக்கி எழுதுக.

———————